# கொழும்பில் நேற்று ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்


விலை ரூபா 6-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 20 இதழ் 245
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 07 - 10 - 1995


(கொழும்பு)

உலக ஆசிரியர் தினமாகிய நேற்று கொழும்பில் இலங்கை ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் அரசிற்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணியை நடாத்தினார்கள்.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் அமைச்சர் ரிச்சார்ட்பத்திரன தலைமையில் ஆசிரியர் தினம் நடந்து கொண்டிருந்த வேளையிலேயே நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் இந்த ஆர்ப்பாட்டங்களை நடாத்தினார்களாம்,

அண்மையில் தரப்பட்ட சம்பள உயர்வு இப்போதுள்ள

[6ம் பக்கம் பார்க்க]

## 150 மாவீரர்களுக்கும் மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட கடும் சமரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களுக்கு கடந்த மூன்று நாட்களும் யாழ் குடாநாடு அஞ்சலியையும் துக்கதினத்தையும அனுஷ்டித்தது.

குடாநாட்டின் சகல பிரதேசங்களிலும் இந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக சிவப்பு, மஞ்சல் நிற கொடிகள் கட்டபபட்டிருந்தன. இதனை விட வீதிகள் தோறும் கறுப்பு கொடிகளாலும் வாழைகள் தோரணங்க

(6ம் பக்கம் பார்க்க)

# மட்டு. எல்லையில் மினி முகாம்
# புலிகளால் தாக்கி முற்றுக அழிப்பு

## எட்டு இராணுவத்தினர் பலி

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பில் எல்லையோர ராணுவ மினி முகாம் ஒன்றை விடுதலைப் புலிகள் தாக்கி முற்றுக அழித்தனர். இத்தாக்குதலில் 8 ராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் நால்வர் காயமடைந்தனர். ஆயுதங்கள் பல விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.**

நேற்று அதிகாலை மட்டக்களப்பின் எல்லையோர ராணுவ மினிமுகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்கி கைப்பற்றி எரித்து முற்றுக அழித்துள்ளனர்.

இத் தாக்குதலின் போது 8 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 4 இராணுவத்தினர் காயமடைந்தனர்.

மினி முகாமிலிருந்த ஏனைய இராணுவத்தினர் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாது தட்பியோடிவிட்டனர்.

இந்த மினி முகாம் தாக்குதலில் 10 துப்பாக்கிகள் உட்பட பல ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டன.

நேற்று அதிகாலை 4 மணியளவில் காண்டக்காடு இராணுவ முகாமிலிருந்து 600 மீற்றர் தொலைவிலிருக்கும் மினி முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தினர் ஒன்பது நிமிட நேர தாக்குதலில் மினி முகாம் விடுதலைப்புலிகளிடம் வீழ்ந்தது.

இந்தத் தாக்குதல் நடந்து

(6ம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மட்டக்களப்பு)

மட்டு மினிமுகாம் தகர்ப்பின்போது தமிழீழ விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

* ஏ.கே. இலகு இயந்திர துப்பாக்கி 1
* அதற்குரிய ரம் ரவைக் கூடுகள் 4
* அதற்குரிய ரவைகள் இணைப்பிகளுடன் 300
* ஏ.கே. ரக துப்பாகிகள் 9
* அதற்குரிய ரவைக் கூடுகள் 22
* தொலைத் தொடர் சாதனம் 1

(6ம் பக்கம் பார்க்க)

## செய்தித் தணிக்கை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என அறிவிப்பு

[கொழும்பு]

அரசபடையினர் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கை தொடர்பான செய்தித் தணிக்கைமுறை தொடர்ந்து அமுலிலிருக்கும் என அரசு நேற்று. அறிவித்துள்ளது.

நேற்றைய கொழும்பு பத்திரிகையில் அரசு தளர்வுப் போக்கை கொண்டுவர இருப்பதாக வெளியிட்டிருக்கும் செய்தியையும் அரசு முற்றுக மறுத்துள்ளது.

இதேவேளை செய்தித் தணிக்கை முறையில் ஓரளவு தளர்வு நிலை கொண்டுவரப்படலாம் என தகவல் தொடர்புத் துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா நேற்று முன்தினம் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. கரி

## பலாலி ஷெல்லுக்கு வல்வையில்
## தாயும் இரு பிள்ளைகளும் பலி!

(வடமராட்சி)

பலாலி இராணுவ முகாமிலிருந்து வடமராட்சிப் பகுதி மக்கள் குடியிருப்பு மீது நேற்றுக்காலை படையினர் ஏவிய எறிகணை வீச்சில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இளம் தாயும், இரு சிறுவர்களும் உட்பட மூவர் பலியானுர்கள். மற்றொரு சிறுமியும், சிறியதாயும் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை 8.15 மணிக்கு பலாலியிலிருந்து ஏவிய ஷெல் வீச்சிலேயே வல்வெட்டித்துறை மானுங்கனையைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயான சண்முகசுந்தரலிங்கம் தவமலர் (வயது 23) இவரது பிள்ளைகளான சண்முகசுந்தரலிங்கம் நித்திலா (வயது 05), சண்முகசுந்தரலிங்கம் சரண்ராஜ் (வயது 07) ஆகிய மூவரும் உடல் சிதறிப் பலியானுர்கள்.

இவரின் மற்றொரு பெண் பிள்ளையான சண்முகசுந்தர

(6ம் பக்கம் பார்க்க)

## வலி. கிழக்கில் நேற்றும் இராணுவச் சிப்பாய் பலி

[யாழ்ப்பாணம்]

வலி கிழக்கில் நேற்றும் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் மோதல் இடம்பெற்றது. இம் மோதலின்போது இராணுவ தரப்பில் ஒரு சிப்பாய் பலியானதாக அரசு தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இச்சம்பவத்தில் ராணுவத்தினரில் ஒருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. மேலும் இப்பகுதியில் ராணு

(6ம் பக்கம் பார்க்க)

## மின்னல் தாக்குதலில் 75 படையினர் பலி

(கொழும்பு)

வலி: வடக்கில் மின்னல் தாக்குதல் இராணுவ நடவடிக்கையில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை அரச தரப்பு செய்திகளின் படி 75 ஆக உயர்ந்துள்ளது.

காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 129 எனவும் இவர்களில் இருவர் அதிகாரிகள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் கொலலப்பட்டவர்களில் ஒருவர் அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது. ரி

### 2 ரெலோ உறுப்பினர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

ஏறாவூரில் இரு ரெலோ உறுபபினர்கள் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோர்களினுல் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. ம·ரி

## தணிக்கைக்கு எதிராக வாசுதேவா கண்டனம்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்தின்போது அரசு நடைமுறைப்படுத்திவரும் தணிக்கைக்கு எதிராக வாக்களிக்கப்போவதாக வாசுதேவநாணயக்கார தெரிவித்துள்ளார்.

வாசுதேவ நாணயக்கார

(6ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் அமைச்சர் கொழும்பு விஜயம்

(கொழும்பு)

பிரிட்டிஷ் வெளிவிவகார பொதுநல உதவி அமைச்சர் ஜெமிகான்லி நாளை 8ம் திகதி கொழும்புக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக வெரித்காஸ் தெரிவித்தது.

வெளிநாட்டு பொதுநலவாய நாடுகள் சம்பந்தமாக இந்த அமைச்சர் கொழும்பில் தங்கி நிற்கும் காலத்தில் ஜனதிபதி சந்திரிகா குமாரதுங்காவோடும், வெளிநாட்டு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமருடனும் உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தையை மேற்கொள்வார்.

பின்பு 10ம் திகதி அவர் இந்தியாவுக்கு பயணமாவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ம-ரி

## வரி விளம்பரம்

### மருதம்

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும். மற்றும் தட்டச்சு, ரோணியோ இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் 66 மணிக்கூட்டு கோபுர வீதி, ஆஸ்பத்திரி முன்பாக, யாழ்ப்பாணம். (ஏ-5351)

### பிரம்புப் பின்னல்

சகல விதமான கதிரைகளும் உங்கள் வீட்டுக்கு வந்து பின்னித் தருபவர்கள்: ராஜன் பின்னலகம், 286, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (ஏ-5364)


## கசிப்பு விற்பனை செய்தவர் கைது

(நெல்லியடி)

கசிப்பு விற்பனையில் ஈடுபட்டிருந்தவரைக் காவல்துறையினர் கைது செய்ததுடன், சில உபகரணங்களையும் கைப்பற்றினர்கள்.

இச்சம்பவம் கடந்த 27ஆம் திகதி உரும்பிராய்ப் பகுதியில் இடம் பெற்றது.

இதேவேளை இப்பகுதியில் வேறொரு வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 10 லீற்றர் கோடாவையும் காவல்துறையினர் மீட்டனர். 160

## இன்று

(யாழ்ப்பாணம்)

குருக்கள் அல்லாத விசுவாசிகளுக்கான தமிழ் மறையியல் கல்லூரியின் தொடக்கமும் டிப்ளோமாக் கற்கை நெறி ஆரம்பமும் இன்று 7ம் திகதி சனிக்கிழமை யாழ். ஆயர் இல்லத்தில் காலை 9.00 மணிக்கு யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சவுந்தரநாயகத்தின் திருப்பலியுடன் ஆரம்பமாகி நடைபெறும்.

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ் நீராவியடி வாலாம்பிகா சமேத வைத்தியநாதன் தேவஸ்தான [கடையிற் சுவாமிகள் சமாதி சிவாலயம்] குருபூசையும் அன்னதானமும் இன்று சனிக்கிழமை காலை 10 மணி முதல் நடைபெறவுள்ளது. -சி

0 0 0

(யாழ்ப்பாணம்)

புனரமைக்கப்பட்ட புனித யாகப்பர் ஆலயம் புனிதம்காக்கப்படும் திருநிகழ்வும் சேவை நயப்பு வைபவமும் இன்று சனிக்கிழமை காலை 6-30 மணிக்கு நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் ஆலயம் சிறிலங்கா விமானப்படையினரின் விமானங்கள் வீசிய தாக்குதலுக்கு இலக்காகிப் பலத்த சேதத்துக்குள்ளானது தெரிந்ததே. 162-சி

0 0

(கொழும்புத்துறை)

இலங்கைத் தேசிய கயரோகத் தடுப்புச் சங்கம் யாழ். கிளையின் விசேட கூட்டம் ஒன்று இன்று 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தில் நடைபெறும். 154

0 0

(கொழும்புத்துறை)

யாழ் வண்ணை ஸ்ரீ வேங்கடேசவர வரதராஜப் பெருமாள் கோயில் 3ஆம் சனி வாரம் இன்று 7ஆம் திகதி சனிக்கிழமை எள்ளெண்ணை எரிக்க கூடுதலாக அடியார்கள் வர இருப்பதால் பாடசாலை இந்து மன்றம், இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்களைத் தவறாது தொண்டர் சேவை செய்ய வருமாறு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது. 154

## நிலைய மாற்றம்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த (உ/த) வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இந்தசமயம், இந்து நாகரிகம். இன்று 7ம் திகதியும், 8ம் திகதியும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதின்படி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இல்லாமல் யா/வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. -சி

## வெள்ளிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. ஏ. ஜே. டேணுட் அடிகளார்ன் குருத்துவப் பட்டம் பெற்ற 25-வது வெள்ளிவிழா இம் மாதம் 19ம் திகதி வியாழக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணிக்கு வண. டேணுட் அடிகளார் யாழ். ஆசனக் கோவிலில் திருப் பலி பூசையை ஒப்புக் கொடுப்பார். பின்பு மேற்படி கல்லூரியின் மதுரம் சதுக்கத்தில் அன்னாரை கௌரவித்து பல நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. வி

## பாடசாலை இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்த கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம் தற்போது சண்டிலிப்பாய் சந்திக்கு அருகாமையிலுள்ள கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. 72

## எரிகாயங்களால் மரணம்

(யாழ்ப்பாணம்)

எரிகாயங்களுக்கு உள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் நேற்று முன்தினம் மரணமானார். திருநெல்வேலி வடக்கைச்சேர்ந்த செ. மகேந்திரன் (வயது 48) என்பவரே மரணமானவர் ஆவார். 170-சி

## சோதிட பயிலரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் பயிலரங்கும், ஆய்வரங்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் ஞானோதயா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

பயிலரங்கில் நட்சத்திர நேரமும் அதன் பிரயோகமும் பற்றி திரு. ஐ. வைத்தியநாதன் விளக்கம் கொடுப்பார். ஆய்வரங்கில் திரு பி. செல்லத்துரை "ஒரு பெண்ணுக்கு விவாகம் உண்டா? இருப்பின் எப்பொழுது நடைபெறும்" என்னும் விடயம் பற்றிய ஆய்வை நடாத்துவார். சி

## ம. எண்ணெயுடன் 'மாகோ' வரும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைத்துறைமுகத்தில் மண்ணெண்ணை பரல்களையும், உணவுப் பொருட்களையும் இறக்கிவிட்டு கொழும்பு நோக்கி சென்றிருக்கும் "மாகோ" கப்பல் மீண்டும் ஒரு தொகுதி மண்ணெண்ணை பரல்களை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறை துறைமுகத்துக்கு வரும் என செயலக உதவி திட்டப்பணிப்பாளர் கூறினர்.

செப்ரம்பர் மாதத்திற்கான கோட்டா மண்ணெண்ணையை 'மாகோ' ஏற்றி வரும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். 170-சி


## தேசியபாதுகாப்பு நிதிபெறும் விளக்கம்

### நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு

| நாள் | காலம் | கிராம சேவக அலுவலர் பிரிவு | நிதி பெறும் இடம் |
|---|---|---|---|
| 08-10-95 (ஞாயிறு) | மு. ப. 09-30 பி. ப. 03-30 | கோண்டாவில் பகுதி ஜே/115, ஜே/116, ஜே/117, ஜே/118, ஜே/119 | கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் |
| 10-10-95 [செவ்.] | மு. ப. 09-30 பி. ப. 03-30 | திருநெல்வேலி பகுதி ஜே/111, ஜே/112, ஜே/113 | செங்குந்தா இந்துக் கல்லூரி |
| 15-10-95 | மு. ப. 9 30-12 30 | நீராவியடி பகுதி J/101, J/100 | குமாரசாமி மண்டபம் |
| (ஞாயிறு) | பி. ப. 3-00-5-30 | அரியாலைப்பகுதி J/91, J/95, | கனகரத்தினம் ம. வி. |
| 20-10-95 [வெள்ளி] | மு. ப. 9.30 பி. ப. 3.30 | நல்லூர் பகுதி ஜே/106, ஜே107, ஜே/108 | நல்லூர் மங்கையர்கரசி வித்தியாலயம் |
| 21-10-95 [சனி] | மு. ப. 9 30 பி. ப. 3 30 | நல்லூர் பகுதி ஜே/103 | நல்லூர் மங்கையர்கரசி வித்தியாலயம் |
| 23-10-95 [திங்கள்] | மு. ப 9 30 பி. ப. 3.30 | கந்தர்மடம் பகுதி ஜே/102, ஜே/104 | கந்தர்மடம் சைவப்பிரகாச பாடசாலை |
| 25-10-95 (வியாழன்) | மு. ப. 09-30 பி. ப. 03-30 | நல்லூர் சங்கிலியன்தோப்பு பகுதி ஜே/109 | நல்லூர் சாதனா பாடசாலை |
| 27-10-95 (சனி) | மு. ப. 09 30 பி. ப. 03-30 | அரியாலை பகுதி ஜே/92, ஜே/96, ஜே/93, ஜே/94 | கனகரத்தினம் மகா வித்தியாலயம் |

குறிப்பு:- நல்லூர் ஏனைய கிராம சேவக அலுவலர் பிரிவைச் சேர்ந்தவர்கள் கந்தர்மடம் ஆலடிச்சந்தி தொடர்பகத்திலும், காலை 9 30 தொடக்கம் பி. ப 3 00 மணிவரை குளப்பிட்டிச்சந்தி தொடர்பகத்திலும் நிதியைச் செலுத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனைத்து நல்லூர்வட்ட மக்களும் மேற்காட்டப்பட்ட ஒழுங்கு அட்டவணைக்கு அமைவாக நிதிப்பங்களிப்பினை செலுத்தலாம்.


## அச்சுவேலியில் படையினரால்
# சங்கிலியால் பிணைக்கப்பட்டு 15 இளைஞர்கள் தடுத்துவைப்பு

(நெல்லியடி)

அச்சுவேலிப்பகுதியில் படையினரிடம் சிக்கிய 15 இளைஞர்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில் வீடொன்றில் தடுத்து வைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டு வருகின்றனராம்.

படையினரிடம் சிக்கி அவர்களிடமிருந்து ஒருவாறு விடுபட்டு வந்த அப்பகுதியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

மேற்படி 15 இளைஞர்களையும் இராணுவத்தினர் சங்கிலியால் தொடர்ச்சியாக இணைத்து வைத்திருப்பதாகவும் இவ் இளைஞர்கள் படையினரால் மிகவும் துன்புறுத்தப்பட்டனரெனவும் அவ் வயோதிபர் தெரிவித்தார். 160-சி

## ★ ஆவரங்காலில் இராணுவம் நுழைந்தபோது
# மரப்பெட்டிக்குள் மகளை 10மணி நேரம் பதுக்கிவைத்து காப்பாற்றிய தாய்!

(சாவகச்சேரி)

மரப்பெட்டிக்குள் சுமார் பத்து மணி நேரம் தனது மகளை பதுக்கி வைத்து இராணுவத்தினரிடம் இருந்து ஒருவர் காப்பாற்றிய சம்பவம் வலிகிழக்கில் நிகழ்ந்துள்ளது.

கடந்த 1ம் திகதி அதிகாலை இராணுவத்தினர் கடும் ஷெல் தாக்குதலை நடாத்திக்கொண்டு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவாறு திடீரென ஆவரங்கால் மேற்குப் பகுதிக்குள் பிரவேசித்தனர். அச்சமயம் புத்தூர் மேற்கைச் சேர்ந்த ஆழ்வார் பவளம் (46 வயது) என்ற பெண்மணி தனது மகளான ஆழ்வார் புவனா (26 வயது) என்பவரை மரப்பெட்டிக்குள் சுமார் பத்துமணி நேரம் பதுக்கி வைத்து காப்பாற்றியுள்ளார்.

இதுபற்றி அவர் கூறுகையில்: அன்று மு. ப 10 மணிக்கு இராணுவத்தினர் கூரியவாள் கத்தி சகிதம் திடீரென எமது வீட்டுக்குள் புகுந்து 'கொட்டியா கொட்டியா' என்று கத்தினர்கள். எனது வீட்டுக்குள் பல மணி நேரம் இராணுவத்தினர் தேடுதல் நடாத்தினர். பின்பு முற்றத்தில் நின்ற கோழியை கத்தியால் எறிந்து கொன்று அதை எடுத்துக் கொண்டு தான் பேணியையும் குடத்தில இருந்த தண்ணீரையும் கொண்டு சென்றனர். இராணுவத்தினர் வருவதும் போவதுமாக அன்று பகல் முழுவதும் நின்றனர்.

பிற்பகல் இரண்டாம் முறையும் எனது வீட்டை சோதனை போட்டனர்.

எமது மகள் அன்று காலை சாப்பிட்ட ரொட்டியும் தேனீரும்தான். மாலை 07 மணிவரை அதே மரப்பெட்டிக்குள் மூச்சு பிடித்தவாறு ஒருவாறு இருந்து தப்பித்துக் கொண்டார். இரவானதும் இராணுவ நடமாட்டம் சற்று ஓய்ந்திருந்தது. ஒருவாறு அச்சுவேலி பக்கமாகச் சென்றோம். தொலைவில் இராணுவ நடமாட்டம் தெரிந்தது. பக்கத்தில் இருந்த கோப்பரேசனுக்குள் பதுங்கி

(6ம் பக்கம் பார்க்க)


## முக்கிய அறிவித்தல்

தமிழீழப் பிரதேசத்தில் தயாரிக்கப்படுகின்ற நாட்காட்டிகளைத் தவிர்ந்த அனைத்து வடிவங்களினதுமான நாட்காட்டிகள் அல்லது நாட்காட்டித் தயாரிப்புக்கான படங்கள், கடைகளில் விற்பனைக்காக காட்சிக்கு வைக்கப்படுவது அல்லது விற்பனை செய்யப்படுவது அல்லது வேறுவகைகளில் விநியோகிக்கப்படுவது இன்றிலிருந்து [07-10-95] முற்றிலும் தடைசெய்யப்படுகிறது என்பதை வணிகத் துறையினர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

யாழ். வணிகர் கழகம்

ஏ- 5367

## மணிவாக்கு

நீ உன்னைப் பலவீனன் என்று ஒருபோதும் சொல்லாதே எழுந்து நில் தைரியமாக இரு, வலிமையுடன் இரு.

—சுவாமி விவேகானந்தர்

# நமது நோக்கு

## உணவுப் பொருள் தடை

சிறிலங்கா அரசு வடபகுதியின் மீது இடிமுழக்கத் தாக்குதலை முடுக்கிவிட்டுள்ளது. அதனால் ஏற்படும் அனர்த்தங்களை வெளியுலகு அறிந்து கொள்ளாத வகையில் செய்தி தணிக்கையும் பிரகடனப்படுத்தியுள்ளது. இதற்கு மேலாகத் தனது பிரசைகள் என்று வடபகுதி மக்களைக் கூறிக்கொண்டு அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் அனுப்பாதுவிட முயற்சிகளை மேற்கொள்கிறது.

வடபகுதிக்கு உணவை அனுப்பாது விடுவதற்கு என்ன காரணம் என்பதை வெளியுலகுக்கு எடுத்துக் காட்ட பொய்களையும் அரசு கூறுகிறது. முன்னர் தேவையற்ற விதத்தில் குடாநாட்டுக்கு உணவுக் கப்பல்களை அனுப்பும் விடயத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவினருடன் முரண்பட்டுக் கொண்டு உணவுக் கப்பல்களை அனுப்புவதில் தாமதம் ஏற்படுத்திய அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் யுனேத் என்பவர் இந்த விடயத்தில் அரசு சார்பில் பிரசாரம் நடத்துகிறார் வடபகுதிக்கு தேவைக்கு அதிகமான உணவுப்பொருள்கள் அனுப்பப்படுவதாகவும் அங்கு உணவுத் தட்டுப்பாடோ பட்டினியோ இல்லையென்றும் புள்ளிவிபரங்களோடு இந்த யுனேத் என்பவர் வாதாடுகிறார்.

இவருடைய வாதங்களுக்கு சிறிலங்கா வானொலி பெரும் விளம்பரத்தை கொடுக்கிறது. ஆனால் உண்மை நிலை என்ன? முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கை தற்போது நடைபெறும் இடிமுழக்கத்தாக்குதல் போன்ற போர் நடவடிக்கையால் மக்கள் தங்கள் பொருட்களை இருந்த இடத்திலேயே விட்டுவிட்டு இடம்பெயர்ந்துள்ளார்கள். உணவுப் பொருட்கள் இருந்த கடைகள் களஞ்சியங்களும் கைவிடப்பட்ட நிலையில்தான் மக்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள். இராணுவம் இல்லாத இடங்களை நோக்கித்தான் மக்கள் இடம்பெயர்கிறார்கள். இப்போது மா இல்லாத நிலையில் தென்மராட்சி பகுதியில் பாணுக்கு மிகவும் தட்டுப்பாடு. அரிசியின் நிலையும் அதுவே.

இராணுவ நடவடிக்கையால் மக்கள் ஆயிரக்கணக்கில் இடம்பெயர்ந்துள்ளார்கள். அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் அவர்கள் பட்டினியை எதிர்நோக்குகிறார்கள் என்ற தகவல்கள் தணிக்கையையும் மீறி வெளி உலகுக்கு எட்டியுள்ளது. அதன் காரணமாக பத்திரிகைகளில் வடபகுதியில் பட்டினிநிலை நிலவுகிறது என்று செய்திகள் வெளிவந்துள்ளது. இந்த உண்மைகளை முறியடிப்பதற்காகவும் மூடிமறைப்பதற்காகவும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பொய்ப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

நிவாரணப் பொருட்களை வடபகுதியில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு அனுப்புவதற்கு அரசு மறைமுகமான தடைகளையும் விதிக்கிறது என்று தகவல்கள் கிடைத்துள்ளன. குடாநாட்டுக்கு நிவாரணப் பொருட்களை எடுத்து வருவதற்கு ''லங்கா கல்யாணி,'' ''லங்கா முடித'' என்ற இரு கப்பல்களை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு வாடகைக்கு அமர்த்தியிருந்தது. இவ்விரு கப்பல்களில் ''லங்கா முடித'' வை இராணுவத்தினர் தமது பாவனைக்கு எடுத்துவிட்டனர். ஆகவே இரு கப்பல்கள் பொருட்களை ஏற்றி வந்தமைக்கு பதிலாக ஒரேஒரு கப்பல்தான் இப்பொழுது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. ''லங்கா முடித'' கப்பலுக்கு பதிலாக வேறொரு கப்பலை இதுவரை அமைச்சு வாடகைக்கு அமர்த்தவில்லை மேலும் குறைந்தது ஒருவார காலத்தில் பொருட்களைக் கப்பலில் ஏற்றி முடிக்கலாம். ஆனால் கப்பலில் தொழில் நுட்பக்கோளாறு என்று கூறி மிகவும் தாமதமாகவே பொருட்கள் ஏற்றப்படுகின்றது. ஆகவே பொருட்களை ஏற்றிக்கொண்டிருக்கும் கப்பல் வடக்கு நோக்கி புறப்பட மேலும் காலதாமதம் ஏற்படும் என கூறப்படுகிறது. அதற்குள் இங்கு இடம்பெயர்ந்த மக்களின் நிலைமை படுமோசம் அடைந்துவிடும்.

அரசு தமிழ் மக்களை வேண்டுமென்று பட்டினி போட எடுக்கும் முயற்சியை வேறு விடயங்களிலிருந்தும் அறிந்து கொள்ளலாம். கடந்த யூலை மாதத்தில் கொழும்புத்துறை முகத்தில்வைத்து ஏற்றப்பட்ட பொருட்கள் செப்ரெம்பர் மாதத்தில் தான்பருத்தித்துறைக்கு கொண்டுவரப்பட்டமையும், நிவாரணப் பொருட்கள் என்ற வகையில் கடந்த மூன்று மாதகாலமாக இங்கு எவ்வித பொருட்களும் கொண்டுவரப்படாமையையும் அரசின் துர்நோக்கத்தை எடுத்துக்காட்டுபவையாக அமைகின்றன.

ஒட்டு மொத்தத்தில் குண்டுவீச்சு, எறிகணை வீச்சுகளால் தமிழ் மக்களைக் கொல்வதும் அதை மூடி மறைக்க செய்தித்தணிக்கையை உபயோகிப்பதும் இடம்பெயர்ந்தவர்களை உணவு நிவாரணப்பொருட்களை அனுப்பாது பட்டினிபோட்டு கொல்வதுமே அரசின் நோக்கம்.

# அடுத்த ஆண்டு பாதுகாப்பு செலவாக 3,398 கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

இலங்கையில் அடுத்த ஆண்டிற்கு இராணுவ செலவீடாக 3398 கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

அடுத்த ஆண்டு நாட்டில் பாதுகாப்பு செலவு அதிகரிக்கப்படுமென கருதியே 3398 கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளதாகவும் அந்தந்த நேரத்திற்கேற்ப குறைநிரப்பு பிரேரணை மூலம் இந்த நிதி மேலும் அதிகரிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த ஆண்டில் அடுத்த இரண்டரை மாத போர் தேவைக்கென 850 கோடி ரூபாவிற்கான குறைநிரப்பு பிரேரணை ஒன்று நேற்று முன் தினம் பாதுகாப்பு அமைச்சினால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது இவ்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டாவது குறைநிரப்பு பிரேரணையாகும்.

இதேவேளை வெளிநாடுகள் பலவற்றிலிருந்து இலங்கை அரசால் கொள்வனவு செய்யப்பட்ட பெருமளவு ஆயுதங்களுக்கான பணம் செலுத்தப்படாததால் அவை அந்தந்த நாடுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது -ஓ

# கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் படையினர் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் படையினர் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

யாழ். குடாவில் படையினர் பாரிய தாக்குதலை தொடுத்து வருவதால் புலிகள் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் திடீர் தாக்குதலை நடாத்தலாமென்ற அச்சத்திலேயே இவ்வாறு பாதுகாப்பு அதிகரிக்கப்படுகிறது

கொழும்பின் முக்கிய பகுதிகளிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு ரோந்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோன்றே கொழும்பின் சுற்றுப் புறங்களிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவாம். ஓ

# படையினரின் கடல்வழிப் பாதைக்கு புலிகளால் தொடர்ந்தும் அச்சுறுத்து!

(கொழும்பு)

வடபகுதிக்கான படையினரின் கடல் வழிப் போக்குவரத்து தொடர்ந்தும் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகும் அச்சுறுத்தல் இருப்பதாக படை வட்டாரங்கள் கூறியுள்ளன.

டோரா பீரங்கிப் படகுகளின் பலத்த பாதுகாப்புடன் பாரிய கப்பல்கள் வடக்கே செல்கின்ற போதும் பல வேளைகளில் புலிகள் கடற்புலிகளின் கடும் தாக்குதலுக்குள்ளாகும் ஆபத்து இருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தொடர்ந்தும் புலிகள் கடற்படைக் கப்பல்கள் மீது தாக்குதல்களை நடாத்தி பாரிய சேதங்களை விளைவிப்பார்களானால் வடக்கே மேற்கொள்ளப்படும் படை நடவடிக்கை பெரும் பாதிப்பிற்குள்ளாவதுடன் படையினருக்கான விநியோகங்களும் பாதிக்கப்படுமெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஓ

## கண்டெடுக்கப்பட்டது

டேவிற்நோபேட்74-டேவிட்ரோட் யாழ்ப்பாணம் என்பவரது உள்ளூராட்சி சேவை திணைக்கள ஓய் வூதிய அட்டையும் யாழ்- மாநகர சபை அடையாள அட்டையும் தொல்புரம் இராசரத்தினம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

# இராசி பலன்

07-10-1995

சனிக்கிழமை

[தமிழுக்கு புரட்டாதி 20]

சதுர்த்தி முன்னிரவு 10-13 வரை, பூரட்டாதி பி.ப. 2-15 வரை. இராகுகாலம் காலை 9-02 முதல் 10-32 வரை, சுபவேளை மாலை 3-02 முதல் 4-32 வரை.

மேடம்: எதிர்பாராத ஆதாயம், காரியசித்தி, பயணம்.

இடபம்: மேலதிகாரிகள் நல்லெண்ணம், சுபவிரயம், மனத்துணிவு,

மிதுனம்: குற்றம் காணல், தொழில் பகை, அலைச்சல்.

கடகம்: கைப் பொருள் இழப்பு, முயற்சித் தடை, வெறுப்பு.

சிங்கம்: தொழில் பெருமை புதிய முயற்சி, நண்பர் உதவி.

கன்னி: பெரியோர் ஆசி, விரோதியை ஜெயித்தல், மன மகிழ்ச்சி.

துலாம்: தாழ்ந்த நிலை, கடமை தவறுதல், மனப்பயம்.

விருச்சிகம்: இனசன பகை, கருத்து மோதல், பண முடை.

தனுசு: தலைமைதாங்குதல் தொழில் லாபம், பணிவிடை.

மகரம்: குடும்ப சுகம், சமயோசித முடிவு, தியானம்.

கும்பம்: வேலைச் சுமைகள், கடினவாக்கு, மனைவி பெருமை

மீனம்: உள்ளக் குமுறல், குடும்பக்கவலை, ஆதரவின்மை

— ஜோஸ்யர்

## பணியாது தமிழீழ தேசம்...!

பலகோடி யிடி மின்னல்
படிகின்ற போதும்
பணியாது தமிழீழ தேசம்.
வெளி வான திசை யாவும்
வெடி செய்த போதும்
வெருவாது தமிழீழ தேசம்.
புலிகூடி விறலோடு
களமேறிப் பாயும்
புதையாது தமிழீழ தேசம்.
அழிவோடு கொலை காண
வெறிபோடி வந்தாய்
அடிபோடி அசையாது வாழும்!

● ● ●

மொழி பேச வியலாத
கதிர்காமக் கறையான்கள்
அரியாத தமிழீழ தேசம்!
வழிமாறி யடிதாழும்
'வயிரஸின்' நிழல கூடப்
படியாத தமிழீழ தேசம்.
நெளிவோடு சுழியோடி
நெடிதுன்னைத் துதிபாடி
நெகிழாது தமிழீழ தேசம்.
அழியாது அடிபோடி
சுடுகாடு ஆனாலும்
பலியாது செய்கின்ற மோசம்

● ● ●

கையைக் குலுக்கி நீ
களம் வந்த போதும்
கலையாது தமிழீழ தேசம்.
பொய்யைக் குலுக்கி நீ
பொறி செய்த போதும்
போகாது தமிழீழ மானம்.
மையப் பெரும் வானம்
முறிகின்ற போதும்
மலையாது தமிழீழ தேசம்
மையப் பிணந்தின்னி
அடிபோடி நாளை
மலர்ந்திடும் தமிழீழ தேசம்!

— நிம்மதி —

# அகதிகளால் நிரம்பி வழியும் தென்மராட்சி

வலி-கிழக்கில் தொடர்ந்து இடம் பெற்றுவரும் 'இடி மின்னல் தாக்குதல்' இராணுவ நடவடிக்கையினால் தென்மராட்சி நோக்கி நகரும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது.

தென்மராட்சிப் பகுதிகளிலுள்ள பாடசாலைகள், கோயில்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது இடங்கள் என எங்கு பார்த்தாலும் இடம் பெயர்ந்த மக்களே நிரம்பி வழிகின்றனர். கைதடி கோப்பாய் வீதியில் டிராக்டர்கள், லான்ட்மாஸ்டர்கள், லொறிகள், வண்டில்கள், சைக்கிள்கள் போன்ற வாகனங்களில் வீட்டுத்தளபாடங்கள், சமையல் பாத்திரங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், விவசாய பொருட்கள் உட்பட பல பொருட்களை ஏற்றிக் கொண்டு வருகின்றனர்.

வெங்காயம் போன்ற பொருட்களும் பெருமளவில் தென்மராட்சி பகுதிக்கு வலிகிழக்கு விவசாயிகளால் கொண்டுவரப்பட்டுள்ளன.

தென்மராட்சியின் பல இடங்களிலும் தமிழர் புனர்வாழ்வு கழகத்தினால் இடம் பெயர்ந்தோர் நலனோம்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இவர்களுக்கான அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து இரவு பகலாக ஓய்வு ஒளிச்சலின்றி தமிழர் புனர்வாழ்வு கழகத் தொண்டர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் தலைமையில் அறவழிப் போராட்டக்குழு, வடக்கு கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம், முன்பள்ளி மேம்பாட்டு நிலைய ஆசிரியர்கள், பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் சமூக பொருளாதார அபிவிருத்திகுழு போன்றவற்றின் தொண்டர்கள் இந்த நலனோம்பு நிலையங்களில் கடமையாற்றி வருகிறார்கள்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடத்தும் இம்முகாம்களில் மட்டும் எண்ணாயிரம் பேர்

**செந்தாளன்**

வரையில் தஞ்சமடைந்துள்ளனர். இவற்றைத் தவிர பதினையாயிரம் குடும்பங்கள் உறவினர்கள், மற்றும் நலனோம்பு நிலையங்களுக்கு வெளியே தங்கியுள்ளனர்.

மின்னல் தாக்குதல் நடவடிக்கையின் போது வடமராட்சி நோக்கி நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் பருத்தித்துறையிலிருந்து இடம் பெயர்ந்த 250க்கும் மேற்பட்ட குடும்பங்களும் தென்மராட்சியில் தஞ்சமடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தென்மராட்சியின் பலபகுதிகளிலும் நிறுவப்பட்டுள்ள நலனோம்பு நிலையங்களைத் தவிர வேறு இடங்களில் இருக்கும் இடம் பெயர்ந்த மக்களை குறிக்கப்பட்ட நிலையங்களுக்கு செல்லுமாறு வேண்டப்படுகின்றனர்.

கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி., கைதடி விக்கினேஸ்வரா ம.வி., மட்டுவில் ம.வி., மட்டுவில் கமலாசினி வித்தி., நாவற்குழி ம.வி., கோயிலாக்கண்டி மகாலக்சுமி வித்தி., மீசாலை விக்கினேஸ்வரா வித்தி., மீசாலை வீரசிங்கம் ம.வி., கைதடி நுணாவில் சரஸ்வதி வித்தி., சாவகச்சேரி மகளிர் வித்தி., கோயில் குடியிருப்பு றோ.க.த. பாடசாலை ஆகிய இடங்களில் தற்போது நலனோம்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன.

இவற்றில் குறைந்தளவு தொகையினரை கொண்ட நிலையங்கள் மூடப்பட்டு வேறிடங்களுக்கு மாற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட நலனோம்பு நிலையங்கள் அமைந்துள்ள பாடசாலைகள் தவிர கைதடி கலைவாணி, நவபுரம் பாடசாலை, மந்துவில் றோ.க. பாடசாலை உட்பட பல பாடசாலைகள் ஆலயங்கள் போன்றவற்றிலும் மக்கள் தஞ்சம் அடைந்துள்ளனர்.

கைதடி தெருப் பிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ள தனியார் காணிகளில் நூற்றிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிசைகள் அமைத்து இருக்கின்றனர்.

தென்மராட்சியில்
### இடம்பெயர்ந்தோர் தங்கியிருக்கும் நலனோம்பு நிலையங்களின் விபரம்

| இடம்: | குடும்பம் | தொகை |
|---|---|---|
| கைதடி முத்து ம.வி. | 141 | 606 |
| கைதடி விக்கி. | 232 | 1,160 |
| மட்டுவில் ம.வி. | 400 | 1,658 |
| மட்டுவில் கமலாசினி | 133 | 655 |
| நாவற்குழி ம.வி. | 100 | 480 |
| கோயிலாக்கண்டி மகாலக்ஷ்மி வி. | 25 | 94 |
| மீசாலை விக்கினேஸ்வரா | 106 | 460 |
| மீசாலை வீரசிங்கம் | 53 | 215 |
| கைதடி நுணாவில் சரஸ்வதி | 120 | 600 |
| சாவகச்சேரி மகளிர் ம.வி. | 110 | 445 |
| கோயில் குடியிருப்பு றோ.க. | 40 | 200 |
| சரசாலை கண்ணகா வி. | 21 | 94 |
| கல்வயல் சண்முகானந்தா | 06 | 19 |

(இவற்றில் சிறிய நலனோம்பு நிலையங்கள் மூடப்பட்டு சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.)

இதேபோன்று இடம் பெயர்ந்தவர்களில் பலர் நலனோம்பு நிலையங்களுக்கு வெளியே குடிசைகள் அமைத்துள்ளனர்.

நலனோம்பு நிலையங்களைத் தவிர வெளியிடங்களில் வாழும் மக்கள் தமக்கு இதுவரை எவ்வித உதவிகளும் கிடைக்கவில்லை எனக் கவலைப்படுகின்றனர்.

இதேவேளை நலனோம்பு நிலையங்களுக்கு வெளியேயுள்ள மக்களுக்கு உதவுவதில் பெரும் சிரமத்தை மேற்கொள்ளவேண்டியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவிகளை ஒருமுகப்படுத்துவதற்கு எல்லோரும் குறிப்பிட்ட இடங்களில் இருப்பதே வசதியெனக் கருதப்படுகிறது.

இடம் பெயர்ந்தவர்களுக்கு உணவுப் பொருட்களுடன் விறகு போன்ற பொருட்களும் வழங்கப்பட வேண்டியுள்ளது, எனவே வீடுவீடாகச் சென்று இப்பொருட்களை வழங்கமுடியாதநிலை இருக்கிறது.

பொருட்களை ஏற்றியிறக்குவதற்கான வாகனங்கள் மற்றும் வாகனங்களுக்கான எரிபொருட்கள் பற்றாக்குறையாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

நலனோம்பு நிலையங்களில் கர்ப்பிணிகள், குழந்தைகள், நோயாளிகள் பலர் இருப்பதால் இவர்களுக்கு பால்மா, மற்றும் மருந்துப் பொருட்களும் கூடுதலாக தேவைப்படுகிறது.

இப்பொருட்களை தென்மராட்சியிலுள்ள தமிழர் புனர்வாழ்வு கழகத்திடம் வழங்குவதன் மூலம் அவை பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைய முடியும்.

அரசு நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஆலயங்கள் மற்றும் பொது அமைப்புகள், நலன் விரும்பிகள் இப்பொருட்களை வழங்கி உதவுமாறு தமிழர் புனர்வாழ்வு கழக பிரதிநிதி கேட்டுள்ளார்.

தென்மராட்சியில் இடம் பெயர்ந்தோர் முகாம்களை பராமரிப்பதில் முனைந்து நின்று பணியாற்றிவரும் தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் மீசாலை புத்தூர் சந்தியிலுள்ள தென்மராட்சி பிரிவு தலைமையகத்திற்கு நேரில் சென்று இடம் பெயர்ந்தோரின் அத்தியாவசிய தேவைகளை இனங்கண்டு உதவ முடியும்.

இடி மின்னல் நடவடிக்கையினால் புத்தூர், நவக்கிரி, சிறுப்பிட்டி, நீர்வேலி, நிலாவரை போன்ற வலிகாமம் கிழக்கின் பல பகுதிகளிலும் இருந்து இடம் பெயர்ந்து நலனோம்பு நிலையங்களில் இருக்கும் மக்களில் பலர் உடுத்த உடுப்புகளுடனே வெளியேறி இருப்பதால் அவர்களுக்கு உடுப்புகளும் அவசரமாகத் தேவைப்படுகிறது. இவற்றினை வழங்க விரும்புபவர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். -ரி

# கமறூஸ் ஆட்சிக் கவிழ்ப்பு பிரெஞ்சு இராணுவத்தால் முறியடிப்பு

(மொரோனி)

இந்து மாகடலில் உள்ள கமறூஸ் தீவில் நடைபெற்ற ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி பிரெஞ் இராணுவம் தலையிட்டதை அடுத்து பிசுபிசுத்து விட்டது.

சுமார் 900 பிரெஞ் படையினர் ஹெலிகொப்டர்கள் மற்றும் 3 போர்க்கப்பல்களின் துணையுடன் கமறூஸ் தீவின் தலைநகரான மொரோனியில் நேற்று முன்தினம் இறங்கி சதி புரட்சியில் ஈடுபட்டோரை உடனே விரட்டியடித்தனர்.

பிரெஞ் கூலிப்படை தலைவர் பாப் றெனோட் தலைமையில் கடந்த வியாழக்கிழமையன்று கலகப் படைகள் ஆட்சியை கவிழ்க்க முயன்றன.

**உலகச் செய்திகள்**

பிரான்ஸ் எடுத்த நடவடிக்கையை தொடர்ந்து சதிப் புரட்சியாளர்கள் நேற்று முன்தினம் சரண் அடைந்தனர். சதிப் புரட்சித் தலைவரும் சரணடைந்தார்.

இராணுவ பாசறையில் அடைக்கப்பட்டிருந்த கமறூஸ் தீவின் அதிபர் சயீர் மொகமட் ஜோ விடுவிக்கப்பட்டார்.

பிரான்ஸ் தூதரகத்தில் அடைக்கலம் புகுந்திருந்த பிரதமர், தேசிய ஒற்றுமை அரசு அமைக்கப்படும் என அறிவித்துள்ளார்.

இந்த திடீர் புரட்சியில் ஈடுபட்டிருந்த கமறூஸ் படையினருக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும் எனவும் அவர் அறிவித்தார். கே-சி

# சீனப் போர் விமானங்களின் செயல்வேகம் குறைந்து வருகிறது

(வாஷிங்டன்)

சீனாவிடமுள்ள போர் விமானங்களில் பாதி 2005ம் ஆண்டிற்குள் செயல் வேகம் குறைந்து ஓய்ந்து விடும் என வாஷிங்டனிலுள்ள றெயின் கோடபரேசன் என்னும் அமைப்பு புதிதாக நடத்திய ஆய்வில் தெரிவித்துள்ளது.

எஸ்-யூ 27 ரக போர் விமானங்களின் 4 அணிகள் உள்நாட்டிலேயே கட்டப்பட்ட எஸ்-10 பல்வகை விமானங்கள் நீங்கலாக சீன விமானப் படையின் பெரும்பாலான விமானங்கள் காலத்திற்கு ஒவ்வாதவையாகி விடும் என்று அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது.

சீனாவின் பாதுகாப்பு செலவு அண்மையில் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் பண வீக்கத்தாலும் இராணுவ வீரர்களுக்கு அதிக ஊதியம் வழங்க வேண்டி இருப்பதாலும் விமானங்கள் வேண்டுவதற்கு போதிய நிதி கிடைக்காது என்பதை அறிக்கை புலப்படுத்துகிறது. கே-சி

பணம் குவிப்பது தனிநலம்
பனை நடுவது பொதுநலம்

கிரிக்கெட்:
# இலங்கையிடம் தோற்றதால் பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டம்

[இஸ்லாமாபாத்]

இலங்கை கிரிக்கெட் அணியிடம் பாகிஸ்தான் அணி படுதோல்வி அடைந்ததையிட்டு, பாகிஸ்தானில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

பாகிஸ்தானின் முக்கிய நகரங்களில் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதுடன், இச்சபைக்கு எதிராக பெருமளவு சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டு வருகின்றன.

இலங்கையிடம் பாகிஸ்தான் தோல்வியடைந்ததற்கான காரணங்களை ஆராய உடனடியாக விசாரணைகள் நடாத்தப்படவேண்டுமென்றும், வீரர்களைத் தெரிவு செய்த தெரிவுக் குழு மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்றும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன், பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் சலீம் மலிக் மீது விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவையும் நீக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் உயர்குழு 9-ம் திகதி திங்கட்கிழமை லாகூரில் கூடவுள்ளது. -வி-சி

சுகாதாரப் பகுதி ஊழியருக்கு
# நிரந்தர நியமன கடிதம் அனுப்பப்படவில்லை

(பண்டத்தரிப்பு)

யாழ் சுகாதார பிராந்தியத்தில் வைத்தியசாலை பரிசாரகர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு மூன்று மாத கால பயிற்சியை பூர்த்தி செய்த இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த 46 சுகாதார திணைக்கள ஊழியர்களும் நிரந்தர நியமனத்தை எதிர்பார்த்துக்காத்திருக்கின்றனர்.

கடந்த வருட இறுதியில் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு யாழ். அரசினர் வைத்தியசாலையில் மூன்று மாத கால பயிற்சியை பூர்த்தி செய்த பின் நடாத்தப்பட்ட செய்முறைப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை ஆகியவற்றில் சித்தி பெற்ற இந்த ஊழியர்களின் பெயர் பட்டியல் திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் அங்கீகாரத்திற்காக யாழ் சுகாதார திணைக்களம் அனுப்பி வைத்துள்ளது.

அங்கிருந்து இவர்களின் நிரந்தர நியமனம்பற்றிய அனுமதி கடிதம் இதுவரை இங்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. -72

# தற்காப்பு நடவடிக்கை மூலம் எமது சந்ததியைக் காப்பாற்றுவோம்

## — வணிக ஊழியர் கழகம்

(யாழ்ப்பாணம்)
ஸ்ரீலங்கா அரசின் திட்டமிடப்பட்ட தமிழின அழிப்பால் கடந்த சில நாட்களாக ஒன்றும் அறியாத அப்பாவி பொதுமக்கள் முதியோர் சிறியோர் குதறப்பட்டும் அங்கவீனம் ஆகியும் கொல்லப்பட்டும் வருகின்றார்கள், கண்மூடித்தனமான தாக்குதல்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன இராணுவத்தின் கொடூர எறிகணை வீச்சுக்கும் விமானத் தாக்குதல்களுக்கும் அஞ்சி பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை, உடமைகளை விட்டு உயிர் தப்பினால் போதும் என்ற நோக்கோடு உடுத்த உடையுடன் இடம்பெயர்ந்து வீதி ஓரங்களிலும், ஆலயங்களிலும், மர நிழல்களிலும், அகதி முகாம்களிலும் தங்கியிருந்து சொல்லொணா துயரங்களையும் வேதனைகளையும் அனுபவித்து வருகின்றார்கள்.

இவ்வாறு யாழ் வணிக ஊழியர்கழகம் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்;

மாணவர்கள் தாங்கள் கல்வி கற்றுவரும் பாடசாலைகளில் தங்கள் கல்வியை தொடர முடியாத நிலையில் உயிரை கையில் பிடித்துக் கொண்டு அலைகிறார்கள், தமிழீழத்தில் எமது மக்கள் தினமும் அனுபவித்துவரும் கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. தமிழீழ மக்கள் கடந்த வாரம் அழிப்பின் விளிம்பில் தத்தளித்து நின்ற போது விடுதலைப் புலிகள் மக்களைக் காக்க பேரினவாதத்தின் பாய்ச்சலை தடுக்க செயற்பட்டனர்; தடுத்து விட்டனர்.

கடந்த 3ம் திகதி அதிகாலை எதிரியை சந்தித்து திகைக்க வைத்தவர்கள் மாவீரர்களாக எமது நெஞ்சத்தில் நிலைத்து விட்டனர். தமிழ் மக்கள் மிகப்பெரிய அளவில் அழிக்கப்பட இருந்தமை, எமது மண் ஆக்கிரமிக்கப்பட இருந்தமை ஆகிய பேரினவாத நடவடிக்கைகள் உறுதி மிக்க போராளிகளால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன ஆனால் ஸ்ரீலங்கா பேரினவாதம் மேலும் எம்மீதும் தாக்குதல்கள் தொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே எமது எதிர்கால சந்ததியை காப்பாற்ற அனைத்து தற்காப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டியது எமது வரலாற்றுக் கடமையாகும் எனவும் குறிப்பிட்டுள்ளது; -சி

# பெரும்போக நெற்செய்கை பெரிதும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)
இராணுவத்தினர் மேற்கொண்ட இடிமின்னல் இராணுவ நடவடிக்கையால் வலிகிழக்கில் இம்முறை பெரும்போக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

புத்தூர், கோப்பாய், அச்சுவேலி, நீர்வேலி, ஆவரங்கால், சிறுப்பிட்டி போன்ற பகுதிகளில் நெல் விதைப்பு பாதிக்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் வயல் நிலங்களை உழுது செம்மைபடுத்தி வைத்திருந்த சமயம் இராணுவம் மேற்கொண்ட இடிமின்னல் இராணுவ நடவடிக்கையால் பெரும் போக நெற்செய்கையை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் வலி கிழக்கு பிரதேசத்தில் உள்ள ஆயிரக்கணக்கான வயல் நிலங்கள் தரிசு நிலங்களாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது. 170-ஒ

# படையினரிடம் சிக்கியவர் 3 நாட்களின் பின் விடுதலை

(நெல்லியடி)
நெல் விதைக்க வயலுக்குச் சென்ற வயோதிபர் இராணுவத்திடம் சிக்கி மூன்று நாட்களின் பின் விடுதலையானார்.

ஆவரங்கால் சாந்தா தோட்டப்பகுதியைச் சேர்ந்த மு. பொன்னர் [வயது 69] என்னும் வயோதிபரே ஆவரங்கால் சிவன் கோவிலடியில் கடந்த முதலாம் திகதி காலை 10 மணிக்கு இராணுவத்திடம் பிடிபட்டவராவர்.

ஆவரங்கால் சிவன் கோவில் கிழக்குப் புறமாக உள்ள வயலில் நெல் விதைப்பதற்காக சென்ற சமயமே இவர் அப்பகுதியில் பதுங்கி நின்ற இராணுவத்திடம் அகப்பட்டார். அங்கு இவருடன் மேலும் சுமார் 25க்கு மேற்பட்டோர் அருகிலுள்ள வீடொன்றில் தடுத்து வைக்கப் பட்டதாகவும் தெரிவித்தார். 160-சி

# அன்ரனோவை மீட்பது எப்போது? தீர்மானிப்பதில் சிக்கலாம்

(கொழும்பு)
நீர்கொழும்பு கடற்பகுதியில் சேற்றில் புதையுண்டிருக்கும் அன்ரனோவ் விமானத்தை மீட்கும் பணி எப்போது ஆரம்பிக்கப்படும் என கூற முடியாதுள்ளதாக இப்பணியில் ஈடுபட்டு வரும் 'மாஸ்ரடைவேர்ஸ்' கம்பனியின் தலைவர் திரு. ஆரியசீல விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்; அன்ரனோவ் விமானம் ஹெந்தலயில் இருந்து 37 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள கடலில் 4,500 அடி ஆழத்தில் புதைந்துள்ளது.

அடுத்த சில தினங்களில் விமானத்தை மீட்டெடுப்பதற்கான வழிமுறைகள் பற்றி ஆராயப்படும். இதற்கான செலவு பற்றியும் மதிப்பிடப்படும். இந்த விமானம் கடலில் வீழ்ந்ததற்கான காரணத்தை கண்டுபிடிக்க முன்னர் அதன் சிதைபாடுகளை ஆராய வேண்டுமென விமானப்படை வட்டாரங்கள் கூறுகின்றன எனவும் தெரிவித்தார்.

30தொன் எடையுள்ள இந்த விமானம்700மைல் வேகத்தில் சென்ற 4,500 அடி ஆழத்தில் புதையுண்டிருப்பதால் விமான அனர்த்தத்திற்கான காரணத்தை இலகுவில் கண்டுபிடிக்க முடியாது என சில நிபுணர்கள் கருதுகின்றனர்.

விபத்து நிகழ்வதற்கு முன்னர் இரத்மலானை விமான நிலையத்திற்கு கடைசியாக கிடைத்த செய்தியின்படி 700 மைல் வேகத்தில் இறங்கிக் கொண்டிருந்தது தெரிய வந்துள்ளது; -சி

# ஆலயம் மீது ஷெல் வீச்சு

## புத்தூரில் இரு வயோதிபர் பலி

(யாழ்ப்பாணம்)
புத்தூரில் ஆலயமொன்றில் தஞ்சமடைந்திருந்த மக்கள் மீது படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் இரு வயோதிபர்கள் உயிரிழந்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. புத்தூர் கிழக்கிலுள்ள கற்பக விநாயகர் கோவிலில் மக்கள் பலர் தஞ்சமடைந்திருந்த வேளை கடந்த புதன்கிழமை பிற்பகல் படையினர் ஏவிய ஷெல் ஒன்று ஆலயத்தில் வீழ்ந்து வெடித்ததில் இரு வயோதிபர்கள் உயிரிழந்தனர்.

இதையடுத்து அங்கிருந்த ஏனைய மக்கள் இரு சடலங்களையும் கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இத்தாக்குதலில் ஆவரங்கால கிழக்கைச் சேர்ந்த பொன்னர் தம்பிராசா (வயது 65], கந்தர் கிட்ணர் (வயது 72) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர். -அ

# தமிழரின் உயிரைப் பறிப்பதுதான் அரசின் தீர்வுத் திட்டமா?

[யாழ்ப்பாணம்]
வடக்கு கிழக்கு மக்களுக்கு நிரந்தரத்தீர்வு ஒன்றுதேவையென முதலைக் கண்ணீர் வடித்து மக்களின் வாக்கைப் பெற்று பொதுசன ஐக்கிய முன்னணி ஜனாதிபதியாக வந்துள்ள சந்திரிகா அம்மையார் இன்று தன்னுடைய முகத்திரையைக் கிழித்து தமிழ் மக்களுக்கு இருக்க இடமின்றி உடுக்கஉடையின்றி அவர்களின் உடல்களைகளையும் சிதற வைத்து உயிரையும் பறிப்பது தான் தீர்வுத் திட்டமா?

இவ்வாறு வடபிராந்திய வகுப்புத் தொழிலாளர் சங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது அவ் அறிக்கை மேலும் தெரிவிக்கையில்:

எமது புனிதஸ்தலங்களையும் பள்ளிச்சிறுார்களையும் குண்டு போட்டு அழிப்பது தான் புத்ததர்மமா? மாறி, மாறி பதவிக்கு வரும் சிங்கள அரசே தமிழனுக்குச் சுதந்திரம் கொடுப்பதாகப் பொய் பிரசாரம் செய்து தமிழினத்தையே கூண்டோடு ஒழிப்பது உங்கள் நோக்கம்: ஆனால் தமிழினம் தூங்கவில்லை என நினைவுபடுத்துகிறோம்.

அரசகெடுபிடியை எதிர்த்து தமிழீழம் காண வேண்டும் என்ற ஒரே நோக்குடன் தொடர்ந்து போராடி வரும் எமது போராளிகளின் வீரதீரச் செயலாகிய புலிப்பாய்ச்சல் நடவடிக்கையும் அச்சுவேலி இடிமுழக்கத் தாக்குதலை எதிர்த்துப் போராடியும் முல்லை கடற்பரப்பில்டோறுப் படகையும், தரை இறங்கும் கப்பலையும் தாக்கி வீரகாவியம் படைத்த எமதுமரணித்த போராளுகளுக்கு வகுப்புத் தொழிலாளர் அஞ்சலியை செலுத்துகின்றனர்.

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றம் விடுத்த அறிக்கையில்: தமிழர் பிரதேசத்தை கைப்பற்ற கங்கணம் கட்டி நிற்கும் அரச படையும் சந்திரிகா அம்மையும் தமிழ் மக்களை கொன்று குவித்து எங்கள் வசிப்பிடங்களை சின்னாபின்னப்படுத்தி எங்கள் வளங்களையும் பொருளாதாரத்தையும், ஆக்கிரமித்து நசுக்கி தன்னை தமிழ் தாயகம் மீது நிலைநிறுத்த முனையும் இவ்வேளையில் சிங்கள இராணுவத்துடன் மோதும் வீரபுலிகளுக்கு நாம் தோழோடு தோழ்நின்று அவர்கள் கரங்களை இறுகப் பற்றி அவர்கள் தேவை அறிந்து ஒத்தழைப்போடு நிர்க்கதியாக்கப்பட்டு இடம் பெயர்ந்து அல்லலுறும் மக்களுக்கு அவர்களின் துயர்களை துடைக்க முன்னின்று உதவி தமிழீழம் விடும் கண்ணீரையும் துடைத்தெறிய நாம் அனைவரும் ஒன்று திரண்டு உதவிடுவோம். தேசத்தின் தேவையை அறிந்து செய்வோம் எனக்குறிப்பிட்டுள்ளது.

# பட்டதாரிகள் சங்கம் கொழும்பில் பேரணி

(கொழும்பு)
வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் சங்கம் நேற்று முன்தினம் காலை பொரளையிலிருந்து ஜனாதிபதி செயலகம் வரை பெரும்பேரணி ஒன்றை நடாத்தியுள்ளது.

தங்களுக்கு வேலை வழங்கக் கோரி இந்த பேரணியில் சுமார் 1,500 பட்டதாரிகள் கலந்து கொண்டனர் இந்த பேரணியில் சுலோக அட்டைகளும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறிய ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் வேலையின்றி இருப்பதாக கூறிய இவர்கள் பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடின் போராட்டம் தொடரும் எனவும் கூறியுள்ளனர். ம-சி

# மினிபஸ் சாரதி ராணுவத்தால் கைது

(நெல்லியடி)
வீட்டிலுள்ள பொருட்களை ஏற்றுவதற்கு மினிபஸ் செலுத்திச் சென்ற சாரதி இராணுவத்தால் கைது செய்யப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 4 45 மணியளவில் புத்தூர் சந்திக்கருகில் நிகழ்ந்துள்ளது.

மினிபஸ் சாரதியான மருதடித்துறை தம்பசிட்டியைச் சேர்ந்த பரதன் [வயது 25] என்பவரே இராணுவத்தினால் கைது செய்யப்பட்டவராவர். 160-சி

# யாழ். குடாத் தாக்குதலில் விமானப்படை உதவி குறைவு

(கொழும்பு)
யாழ். குடாவில் படையினர் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கையில் விமானப் படையினரின் உதவிமிகக் குறைவாகவே இருப்பதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்

யுத்த முனையில் புலிகளுக்கு எதிரான தாக்குதலை விமானப்படை விமானங்கள் மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் படையினரின் முன்னேற்ற நடவடிக்கையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை யுத்த முனையில் விமானப் படையினரின் செயற்பாடு குறித்து கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

புலிகளின் ஏவுகணை அச்சுறுத்தலால் விமானங்கள் போர் முனைக்கு வருவதை தவிர்த்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. ஒ

# நாய், கோழிகளுக்கு பொது அமைப்புகள் மூலம் நோய்த் தடுப்பூசி!

(கொழும்புத்துறை)
யாழ் பிறவுண்வீதிச்சந்தியில் உள்ள கால்நடை வைத்திய சாலை மூலம் கோழிகளுக்கு இலவசமாக தடுப்பூசி போடுதல், பசுமாடுகளை சினைப்படுத்தலும் நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி போடுதலும் நடைபெற்றுவருகிறது.

அந்தந்தப்பகுதிகளில் உள்ள பொது நிறுவனங்கள் நேரிலோ கடிதமூலமோ விண்ணப்பித்தால் தமது அலுவலக ஊழியர்கள் இப்பணிகளை நேரில் சமூகம் தந்து நடைமுறைப்படுத்துவார்கள் என யாழ். கால்நடை வைத்திய சாலை அத்தியட்சகர் திரு. மு. தவராசா தெரிவித்துள்ளார். - 154

# தமிழீழத்தில் அமைதிவேண்டி பிரிட்டனில் எழுச்சி மாநாடு

(லண்டன்)

தமிழீழத்தில் நிரந்தர அமைதி வேண்டி பிரித்தானியாவில் ஈழத் தமிழர்களால் அண்மையில் எழுச்சி மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

இம்மாநாட்டில் சுமார் ஏழாயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் கலந்து கொண்டனர்.

ஈழத்தமிழர்களின் பாதுகாப்பு குறித்து இம்மாநாட்டில் கலந்து கொண்டவர்களினால் வலியுறுத்தப்பட்டது.

ஈழத்தமிழர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த எழுச்சி மாநாடு நடத்தப்பட்டது.

இதேவேளை ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பெரும் ஆர்ப்பாட்ட பேரணிகள் அங்குள்ள தமிழர்களால் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ரி)

# ட்ரைஸ்டார் விமானத்துக்கு 45 லட்சம் அமெரிக்க டொலர் செலவு

[கொழும்பு]

எயார்லங்கா நிறுவனம் லொக்ஹீட் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்த ட்ரைஸ்டார் என்ற விமானத்துக்கு 45 லட்சம் அமெரிக்க டொலர் செலவில் திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விமானம் 1999-ம் ஆண்டுவரை பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டதாக எயார் லங்கா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஹொங்கொங் நாட்டுக்கு அனுப்பப்பட்டு திருத்தப்பட்டுள்ள ட்ரைஸ்டார் விமானத்தின் நிறை முன்னரைவிட அதிகரித்துள்ளதால் வழமையான எண்ணிக்கையில் பயணிகளை கொண்டுசெல்ல முடியாது எனவும் எயார்லங்கா வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. ரி

# வலி.கிழக்கில் ராணுவத்தால் வீடுகள் தரைமட்டம்

[யாழ்ப்பாணம்]

வலி கிழக்கு இராணுவ ஆக்கிரமிப்பு பகுதிகளிலுள்ள வீடுகள் இராணுவத்தினரால் உடைக்கப்பட்டு தரைமட்டமாக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. பத்தமேனி, அச்சுவேலி, நவக்கிரி, ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளே இராணுவத்தினரால் தகர்க்கப்பட்டு வருகிறது.

இப்பகுதிகளில் பெரும் குண்டுச் சத்தங்கள் கேட்பதாகவும் இப்பகுதிகளிலிருந்து புகை மேலெழுந்து செல்வதைக் காணக்கூடியதாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 162-ரி

# உலக ஆசிரியர் தினம் நேற்று சிறப்பாக கொண்டாடப்பட்டது

[யாழ்ப்பாணம்]

உலக ஆசிரியர் தினம் நேற்று யாழ். குடாநாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது

ஆசிரியர்களைக் கௌரவிக்குமுகமாக சகல பாடசாலைகளிலும் பெற்றோர்கள் மாணவர்கள், நலன் விரும்பிகள் இணைந்து இவ்விழாவை ஒழுங்கு செய்து நடத்தினர்கள். இவ்விழாவின்போது பெற்றோர்கள், மாணவர்களால் மலர்மாலை அணிவித்து மலர்ச் செண்டுகள் வழங்கப்பட்டு சகல ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டார்கள்.

ஆசிரியர்களின் மேன்மையை சித்தரிக்கும் கலை நிகழ்ச்சிகள் சொற்பொழிவுகள் என்பனவும் பாடசாலை ரீதியாக இடம்பெற்றன.

தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையும் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் விசேட ஏற்பாடுகளை மேற்கொண்டது.

ஆசிரியர்களை கௌரவித்து அவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகளும் பாடசாலைகளில் இடம்பெற்றன.

தமிழீழ கல்விக்கழகம், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு என்பனவும் ஆசிரியர்களை கௌரவிக்கும் முகமாக சுவரொட்டிகளை வெளியிட்டுள்ளன. 162-ரி

## யாழ். வட்டத்தில்

# பாதுகாப்பு நிதி சேகரிப்பு நேர இட விபரங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். வட்டத்தில் தேசிய பாதுகாப்பு நிதி சேகரிப்பதற்கு நாளையும், நாளை மறுதினமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை 8ம் திகதி ஜே/61, 62, 63 கிராம சேவகர் பிரிவுகளுக்கு காலை 9-00 மணி தொடக்கம் 12-00 மணிவரையும் கொழும்புத்துறை மேற்கு ச.ச. நிலையத்திலும் பி.ப. 2-00 மணி தொடக்கம் 5-00 மணி வரை ஜே/ 64, 65, 66 கிராம சேவகர் பிரிவுகளுக்கு பாசையூர் சென் அன்ரனிஸ் வித்தியாலயத்திலும், நாளை மறுதினம் 9ம் திகதி ஜே/ 67, 68, 69 கிராம சேவகர் பிரிவுகளுக்கு காலை 9-00 மணி தொடக்கம் 12-00 மணி வரை குருநகர் றெக்கிளமேசன் ச.ச. நிலையத்திலும் பி.ப. 2-00 மணி தொடக்கம் 5-00 மணி வரை ஜே/70, 71, 72 கிராம சேவகர் பிரிவுகளுக்கு குருநகர் ச.ச. நிலையத்திலும் பாதுகாப்பு நிதி சேகரிக்கப்படும். ரி

# ஷெல் வீச்சுக்கு வயோதிப மாது காயம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறைப் பகுதியை நோக்கி நேற்று முன்தினம் நடாத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் வயோதிபமாது ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் நண்பகலும் மாலையும் பலாலியில் இருந்து சரமாரியான ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன.

மாலை 4 மணியளவில் ஏவப்பட்ட ஷெல்களில் பல தீருவில் அம்மன், சிவன் கோவிலடி சூழலில் விழுந்துவெடித்தன. மேற்படி ஷெல்லினால் யோகநாயகி திரையரங்கில் இருந்த திருமதி தங்கவடிவேல் கமலாவதி [வயது67] என்பவரே படுகாயமடைந்தார். 51-ரி

## வலி. கிழக்கில்

(1ம் பக்க தொடர்ச்சி)

வத்தினர் தற்போது நிலை கொண்டுள்ள இடங்களில் தமது நிலைகளைப் பலப்படுத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. ரி

# ஆயிரம் வீட்டு திட்டத்திற்கு யூனிசெவ், கெயர் உதவி

(யாழ்ப்பாணம்)

முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்த மக்களுக்காக அமைக்கப்பட்டுவரும் வரணி 1000 வீட்டுத் திட்டத்திலுள்ள 200 குடும்பங்களுக்கான படுக்கைவிரிப்புகள் பாவனைப் பொருட்கள் இயற்றுலைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வீட்டுத்திட்ட காரியாலயத்தில் வைத்து அகில உலக கெயர் ஸ்தாபன பிரதிநிதி அருள்ஞானத்தினால் வழங்கப்பட்டது.

இத்திட்டச் செயற்பாட்டில் இதுவரை 300ற்கு மேற்பட்ட வீடுகளும் 11 குழாய்க்கிணறும், ஒரு திறந்த கிணறும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் அமைக்கப்பட்டுள்ளதோடு 3 குளங்களும் புனரமைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வருகை தந்த ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் அகதிகளுக்கான விசேட ஆணையாளரின் பிரதிநிதியும், யுனிசெவ் ஸ்தாபன பிரதிநிதியும் இத்திட்டத்தை பார்வையிட்டு இவ்வீட்டுத்திட்ட மக்களுக்கான விளக்குகளை யுனிசெவ் பிரதிநிதி இயற்றுலை வீட்டுத் திட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (சி)

## மட்டு எல்லையில்

(1ம் பக்க தொடர்ச்சி)

கொண்டிருந்த வேளை காண்டாக்காடு ராணுவ முகாமிலிருந்து மூன்று பவள் கவசவாகனங்கள் சகிதம் உதவிக்கு வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகளின் மற்றொரு அணி கடும் தாக்குதலை நடத்தி அவர்களைத் திருப்பி அனுப்பியது.

இதன்போது ராணுவத்துக்கு ஏற்பட்ட சேத விபரம் பற்றி தெரியவரவில்லை. -ரி

## கைப்பற்றப்பட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

* கிளைமோர் 1
* பராலைற் 3
* நடுத்தர ரவைகள் 1460

போன்ற ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## வீரச்சாவு

இந்த தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 2ம் லெப். ரகுராமநாதன் அல்லது பாஸ்கரன் (செல்வராசா வரதராசா மட்டக்களப்பு) என்ற போராளி வீரச்சாவடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர். ரி

# வலி-கிழக்கு பகுதியில் ஷெல்வீச்சு தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவமுகாமிலிருந்து இராணுவத்தினர் நேற்றுமுன்தினமிரவும் நேற்று அதிகாலை வேளையிலும் வலி. கிழக்கு பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இதே வேளை நேற்று காலையில் படையினர் வடமராட்சி நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். 170-ரி

## வங்கிகளுக்கு

# ஒய்வூதிய வவுச்சர்கள் செவ்வாய் அனுப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

ஒக்டோபர் மாதத்திற்கான ஒய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் வங்கிகளுக்கு எதிர் வரும் செவ்வாய்க்கிழமை அனுப்பி வைக்கப்படும் என்று செயலக ஒய்வூதிய கணக்காளர் அறிவித்துள்ளார்.

சகல ஒய்வூதியர்களும் ஒய்வூதிய அட்டையுடனும் அல்லது தேசிய அடையாள அட்டையுடனும் தாம் ஒய்வூதியம்பெறும் வங்கிக்கு எதிர் வரும் பத்தாம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் சென்று ஒக்டோபர் மாத ஒய்வூதிய கொடுப்பனவை பெற்றுக்கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றனர்.

அத்துடன் உள்ளூராட்சி சேவை ஒய்வூதியர்களின் ஒக்டோபர் மாத வவுச்சர்கள் யாழ் செயலகத்திற்கு வந்து சேரவில்லை என்றும் ஒய்வூதிய கணக்காளர் மேலும் அறிவித்துள்ளார். 170 ரி

## ஆவரங்காலில்

[2ம் பக்கத் தொடர்ச்சி]

யிருந்து தப்பித்துக்கொண்டோம்.

அங்கிருந்து மறுநாள் குறுக்கு பாதைகளாலும் தோட்டம் வழியாகவும் நடந்து வந்து வாதரவத்தையை அடைந்தோம். அங்கு ஒரு கோவிலில் தங்கி விட்டு அங்கிருந்து எனது மகளை வடமராட்சிக்கு ஒருவருடைய சைக்கிளில் அனுப்பிவிட்டு நான் இங்கு வந்துசேர்ந்தேன் என்றார்.

தற்போது இவர் மட்டுவில் பகுதியில் தங்கியுள்ளார். 155-சி

## 150 மாவீரர்களுக்கும்

(1ம் பக்க தொடர்ச்சி)

ளும் கட்டப்பட்டிருந்தன. சோக கீதங்களும் ஒலி பெருக்கி மூலம் இசைக்கப்பட்டது.

வெங்களமாடி போராடி வீழ்ந்தாகிய இந்த 150 மாவீரர்களையும் நினைவு கூரும் முகமாக பல்வேறு பொது அமைப்புக்கள் என்பன தமது இரங்கல் செய்திகளை வெளியிட்டு வருகின்றனர் 170 ரி

“ஈழநாடு”

வாரமலர்

08-10-95 [ஞாயிறு]

இவ்விதழில்...

- வே. பாலகுமாரன்
- கந். தர்மலிங்கம்
- கருணை ரவி
- ச. தியாகராசா
- மு. வே. யோ. வாஞ்சிநாதன்

ஆகியவர்களின் படைப்புக்களுடனும் சிறுவர் அரங்கம், பெண்கள் உலகம் போன்ற அம்சங்களும் இடம் பெறுகின்றன.

விலை 6/- ரூபா மாத்திரம்.

## பலாலி ஷெல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லிங்கம் சரணியா (வயது 08) என்பவரும் இவர்களது சிறிய தாயான குணசிங்கம் மகாலட்சுமி (வயது 38) என்னும் பெண்மணியும் காயமடைந்து வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவ மனையிலிருந்து மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இறந்த இப்பெண்மணியின் கணவர் கடந்த வருடம் தொழில் வாய்ப்புக்காக சவூதி அரேபியாவுக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது. 51-160-ரி

## கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கைச் செலவுக்குப் போதுமானதல்ல என்ற கோரிக்கைகளுடன் வேறு பல கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டது. என்றும் பல தடவை கல்வி அமைச்சருக்கு இதுபற்றி மகஜர் அனுப்பியும் எந்தவிதப் பலனேதும கிடைக்கவில்லை என்றும் இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் தெரிவித்தார். என்று பி. பி. ஸி தெரிவித்தது. ம.ரி

## தணிக்கைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொ. ஐ. மு. அரசின் நாடாளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. தணிக்கை முறைக்கெதிராக வாசுதேவா தனது கண்டனத்தையும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் அரசின் தணிக்கை முறைக்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். ம-ரி

இப்பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.